கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தாம்பரம் இரயில் நிலையத்திலிருந்து சிதம்பரத்திற்கு நேற்று முன்தினம் (14.7.2025) இரயிலில் புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் வழியனுப்பி வைத்தனர்.

### ஒசாகாவில் நடைபெறும் ‘எக்ஸ்போ 2025’ல் தமிழ்நாடு பெவிலியன் திறப்பு!

### திராவிட மாடல் முதலமைச்சர் முன்னிலையில்

# ஜப்பான் நிறுவனங்களால் போடப்பட்ட ஒப்பந்தங்கள் 100% முதலீடுகளாக மாறியுள்ளன!

## தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

ஒசாகா, ஜூலை 16-

தமிழ்நாடு அரசின் தொழில்துறையினருடன் ஜப்பான் நாட்டிற்குச் சென்றுள்ள தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

நமது Team TamilNadu ஒரு மிக முக்கியமான பயணத்தைத் தொடங்கியுள்ள இந்த தருணத்தில், கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் ஜப்பான் பயணத்தின் போது நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் 100% முதலீடுகளாக மாற்றப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இதுவரை இல்லாத சாதனையாக, ஒப்பந்தங்களை முழுமையான முதலீடுகளாகவும், தமிழ்நாட்டிற்கான வேலை வாய்ப்பாகவும் மாற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகிறது!

ஜூலை 14 அன்று ஜப்பானின் முக்கிய நகரமான ஒசாகாவில் நடைபெறும் உலக எக்ஸ்போ 2025இல் இந்தியா பெவிலியனுக்குள் அமைந்துள்ள தமிழ்நாடு பெவிலியனை திறந்து வைத்து நமது பயணத்தைத் தொடங்கியுள்ளோம். தமிழ்நாடு பெவிலியன் நம் மாநிலத்தின் மரபு, வளம், தொழில்துறையிலுள்ள முன்னேற்றம் ஆகிய அனைத்தையும் கொண்டாடும் ஓர் அர்ப்பணிப்பாகும்.

இந்நிகழ்வில், தமிழ் நாட்டின் பண்பாட்டு ஆழமும், எதிர்கால இலட்சியங்களும் மிக வலிமையாக எதிரொலித்ததுடன், நமது பாரம்பரியக் கலை வடிவங்களான பறை, பரதநாட்டியம், சிலம்பம் மற்றும் அடிமுறை ஆகியவை நிகழ்த்தப்பட்டன. ஒசாகாவில் சிறந்த ஏற்பாடுகளை செய்து தந்த திரு. சந்துரு அப்பர் அவர்களின் அருமையான ஆலோசனைகளுக்கும் உதவிக்கும் எங்களது நன்றியை தெரி வித்துக் கொள்கிறோம்

இந்தப் பயணத்தின் போது, நமது நீண்டகால தொழிற்கூட்டாளிகளான எஹைம் மற்றும் ஹிரோஷிமா பகுதிகளுடன் மேலும் வலுவான ஒத்துழைப்புகளை விரிவுபடுத்தவும், புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராயவும், எதிர்கால தொழில் துறைகளுக்கான ஒத்துழைப்புகளை ஏற்படுத்தவுமான செயல்பாடுகளை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தமிழ்நாடு அரசின் தொழில்துறை மேற்கொள்ளவிருக்கிறது.

தொழில்துறை வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் வேகமாகவும் முனைப்போடும் நகர வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் தெளிவான வழிகாட்டுதலின் வெளிப்பாடாக ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதிவிட்டுள்ளார்.

### போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செய்ய விரும்பிய

# ஜம்மு-காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாவுக்கு வீட்டுச் சிறை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஜூலை 16-

ஜம்மு-காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா அவர்கள் 1931-ஆம் ஆண்டு போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செலுத்த விரும்பினார் என்ற ஒரே காரணத்திற்காக அவர் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு, சுவர் ஏறிக் குதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். இதனை அனைத்து ஜனநாயகக் குரல்களும் ஓரணியில் கண்டித்தாக வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஜம்மு - காஷ்மீரின் மாநிலத் தகுதி மீண்டும் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் நிலையில், இன்று அரங்கேறியுள்ள நிகழ்வுகள் அங்கே எந்தளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது என்பதன் கொடூர நினைவூட்டலாக அமைந்துள்ளன.**

**மக்களால் தேர்த்தெடுக்கப்பட்ட முதலமைச்சரான உமர் அப்துல்லா அவர்கள் 1931ஆம் போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செலுத்த விரும்பினார் என்ற ஒரே காரணத்துக்காக அவர் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு, சுவர் ஏறிக் குதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலமைச்சரை இப்படியா நடத்துவது?**

**இது ஏதோ ஒரு மாநிலம் அல்லது ஒரு தலைவரைப் பற்றியது மட்டும் என்று பார்க்க முடியாது! தமிழ்நாடு தொடங்கி காஷ்மீர் வரை ஒன்றிய பா.ஜ.க. அரசானது தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் உரிமைகளைத் திட்டமிட்டுப் பறிக்கிறது.**

**இன்று காஷ்மீரில் நடப்பது எங்கு வேண்டுமானாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தத் தலைவருக்கும் நடக்கலாம். அனைத்து ஜனநாயகக் குரல்களும் இதனை ஓரணியில் கண்டித்தாக வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. மருத்துவ அணி இணைச் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. மருத்துவ அணி இணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த டாக்டர் அ.சுபேர்கான் அவர்கள் சிறுபான்மை நலஉரிமை பிரிவு செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக, மருத்துவ அணி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திரு. **ஆர்.அண்ணாமலை** அவர்கள், **மருத்துவ அணி இணைச் செயலாளராகவும்;**

டாக்டர் இரா.லட்சுமணன் அவர்கள் மாவட்ட பொறுப்பாளராகவும் திரு. அண்ணாமலை அவர்கள் இணைச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டதால், அவர்களுக்குப் பதிலாக, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்களான **மருத்துவர் விவேக்** (ஈரோடு தெற்கு மாவட்டம்), **மருத்துவர் கிருத்திகா** (காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்) ஆகியோர் **தி.மு.க. மருத்துவ அணி துணைச் செயலாளர்களாகவும்** தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில மருத்துவ அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர்கள் கழகப் பணியாற்றுவார்கள்.

``அண்ணா அறிவாலயம்''
சென்னை 600 018,
நாள் : 14-7- 2025.

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### தமிழ்நாடு அரசின்

# இயல், இசை, நாடக மன்றம் சார்பில் - ‘நல்கை’ வழங்கும் திட்டங்கள்!

## தகுதிவாய்ந்தோர் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகோள்!

*சென்னை, ஜூலை 16-*

*தமிழ்நாடு அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழ் நாடு இயல் - இசை - நாடக மன்றம் செயல்படுத்துவுள்ள “நல்கை வழங்கும் திட்டங்கள்” குறித்த செய்தி வெளியீடு வருமாறு :-*

*2024-2025-ம் ஆண்டிற்கான தமிழில் புதிய நாட்டிய-நாடகங்கள் மற்றும் நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய ஒரு நாடகத்திற்கு ரூ.1,50,000 இலட்சம் நிதியுதவி வழங்குதல்.*

*தமிழில் சிறந்த புதிய நாட்டிய-நாடகங்கள் (தமிழ் கலைகள், இலக்கியம், பண்பாடு) மற்றும் நாடகங்கள் உருவாக்கி (வரலாறு, புராண, சமூக நாடகங்கள்) மேடையேற்றம் செய்யும் நிறுவனங்களுக்கு நல்கை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*2024-2025-ம் ஆண்டிற்கான தமிழில் கருத்தாழமிக்க அரிய கலை சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.*

*தமிழகத்தில் கலை சார்ந்த நூல்களை எழுதும் நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வண்ணம், கருத்தாழமிக்க தமிழில் அரிய கலை நூல்களை பதிப்பிக்க, நூல் ஒன்றுக்கு ரூ.2,00,000/- வீதம் 5 நூல்களுக்கு ரூ.10.00 இலட்சம் நல்கை வழங்கம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*மேற்காண் 2 திட்டங்களிலும் விண்ணப்பிக்க விரும்பும் கலைக்குழு / கலை நிறுவனங்கள் / நூலாசிரியர்கள் அந்தந்த திட்டத்திற்கான விண்ணப்பப் படிவம் மன்றத்தில் இலவசமாக நேரிலோ அல்லது தபாலிலோ (சுயமுகவரியிட்ட உறையில் ரூ.10/-க்கான தபால் தலை ஒட்டி மன்றத்திற்கு அனுப்பி) பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்தினை முழுமையாக பூர்த்தி செய்து 31.07.2025-க்குள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

*உறுப்பினர்-செயலாளர்,*
*தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,*
*31, பொன்னி, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை,*
*சென்னை - 600 028.*
*(தொலைபேசி - 044 2493 7471) மின்னஞ்சல் - tneinm@gmail.com, tneinm@tn.gov.in*

*இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# பெருந்தலைவர் காமராஜர் 123வது பிறந்த நாள்!

## சிலைக்கு - பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, - டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை!

*திருவண்ணாமலை, ஜூலை 16 -*

*கல்வி வளர்ச்சி நாளாம், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், அவரது திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே. கம்பன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.*

*15.07.2025 செவ்வாய் கிழமை காலை 10.00 மணிக்கு திருவண்ணாமலை, செங்கம் சாலையில், கல்வி வளர்ச்சி நாளாம், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 123வது பிறந்த நாள் விழா, மாவட்ட தி.மு.க. சார்பில் கொண்டாடப்பட்டது.*

*விழாவிற்கு கழக மருத்துவரணி துணைத் துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் தலைமை வகித்தார்.*

*மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன், மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றார்.*

*பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

*பிறந்த நாள் விழாவில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை டி.வி.எம்.நேரு, துணை மேயர் சு.ராஜாங்கம், பகுதிப் பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், குட்டி க. புகழேந்தி, பா.ஷெரீப், மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.எஸ்.கண்ணதாசன், நகர துணைச் செயலாளர் மு.கருணாமூர்த்தி, மாவட்டப் பிரதிநிதி ஹக்கிம்சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜவுளி தினகரன், ஏ.எம்.பாஷா, மு.க.ரகுவர் மன், எஸ்.சுனா பேகம், காமாட்சி பாண்டியன், மீனாகேசவன், ஆராஞ்சி சேகர், நகர அமைப்பாளர் எம்.குணாளன், நகர துணை அமைப்பாளர்கள் சச்சின் சபரி, சாம்.ரகுநாத், ரகுபதி, வட்டச் செயலாளர்கள் சென்னை சுரேஷ், டி.எல். எம்.வினோத்குமார், என். முரளி, இராஜாமணி, கல்லூரி மாணவர் தலைவர் பரணி, சாதிக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

# தி.மு.க. நெசவாளர் அணி துணைச் செயலாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. நெசவாளர் அணி துணைச் செயலாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆ.ராமசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **கே.சரவணன்**, (ஸ்ரீசெல்லியம்மன் இல்லம், 271, காவேரி வீதி, பவானி 638 301, ஈரோடு மாவட்டம்) அவர்கள் தி.மு.க. நெசவாளர் அணி துணைச் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில நெசவாளர் அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

``அண்ணா அறிவாலயம்''
சென்னை 600 018,
நாள் : 14-7- 2025.

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய கழக அலுவலகத்தை, ரிஷிவந்தியம் ஊராட்சியில் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் ச.அ.பெருநற்கிள்ளி முன்னிலையில் கழக நிர்வாகிகள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்தார், இந்நிகழ்வில் ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.பெருமாள், ஒன்றிய குழு பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்ரமணியன், மாவட்ட கழக பொருளாளர் ஆதி.கு.கோவிந்தராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.ராஜு, ஒன்றிய கழக அவைத்தலைவர் கே.சுந்தரராஜன்,கிளை கழக செயலாளர் சிவமுருகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.